IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 76/2016 |
| | | P/W's | : | PW1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | புஷ்பம் | CASTE | : | |
| W/O | தங்கவேல் | RELIGION | : | இந்து |
| VILLAGE | தெத்தூர் டி மேட்டுப்பட்டி | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 60 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 21.01.2026**

**குறுக்கு விசாரணை**

1. நான் முதலில் 2016ம் வருடம் 7 ஏக்கர் 52 செண்டுக்குத்தான் பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வழக்குச்சொத்து எத்தனை சர்வே நம்பரில் அமைந்துள்ளது என்றாலும் அதன் தனித்தனி விஸ்தீரணங்களும் எனக்குத்தெரியாது. வழக்குச்சொத்துக்களின் நான்குமால் எனக்குத்தெரியும். வழக்குச்சொத்துக்களின் நான்குமாலை பிராதில் குறிப்பிட்டுள்ளேன். வழக்கின் 2ம் பிரதிவாதி நாராயணசாமி இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

2. 1ம் பிரதிவாதி 14.03.2014, 28.04.2014 ஆகிய தேதிகளில் 3ம் பிரதிவாதிக்கு ஈடுகடன் பத்திரம் எழுதி பதிவு செய்த விவரம் எனக்குத்தெரியுமா என்றால் எனக்குத்தெரியாது. 3ம் பிரதிவாதி எதற்காக வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் அவர்கள் தாவா சொத்திற்கு பணம் கொடுத்துள்ளதாகவும் அதன்படி பயிர் விதைக்க முயற்சி செய்ததால் அவர்களை சேர்த்துள்ளேன். 1ம் பிரதிவாதி 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த ஈடுகடன் பத்திரங்களையும் கிரைய ஒப்பந்த பத்திரங்களையும் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான்.

3. 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த பரிகாரமும் வழக்கில் கேட்கவில்லை என்றால் சரிதான். எனது அப்பா இறந்தவுடன் வழக்குச்சொத்தில் எனக்கும் பங்கு உள்ள விவரம் எனக்குத்தெரியும். எனது அப்பா இறந்த காலத்திலேயே

1ம் பிரதிவாதியிடம் பங்கு பிரிக்குமாறு கேட்டேன், அவர் பங்கு பிரித்துத்தர மறுத்துவிட்டார். எனது அம்மா இறந்தபின் அவருக்கு கருமாதி தினத்தன்று சமையல் செய்வதில் 1ம் பிரதிவாதியுடன் பிரச்சனை ஏற்பட்டு அவருடன் பேச்சு வழக்கு இல்லை என்றால் சரிதான்.

4. எனது முதல் மகள் சடங்கிற்கு 1ம் பிரதிவாதி வந்திருந்தார், 2வது மகள் சடங்கிற்குதான் வரவில்லை. அப்போதிலிருந்தே 1ம் பிரதிவாதியுடன் எனக்கு பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். எனது அப்பா காலத்திலிருந்தே வழக்குச்சொத்தில் 1ம் பிரதிவாதி விவசாயம் பார்த்தார் என்றால் சரியல்ல, நாங்கள் ஒரே குடும்பமாகதான் இருந்தோம். எனது திருமணம் முடிந்தபின் நான் என் கணவருடன்தான் இருந்தேன். 2ம் வாதி அவர் திருமணத்திற்குப்பின் வாடிப்பட்டியில்தான் குடியிருந்துவருகிறார் என்றால் சரிதான்.

5. 1ம் பிரதிவாதி 3வது வரை படித்தார் என்றால் எனக்குத்தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு விவசாயம் தான் தொழில் என்றால் சரிதான். வழக்குச்சொத்தை தவிர 1ம் பிரதிவாதி குடும்பத்துக்கும் வேறு சொத்துக்கள் இல்லை என்றால் சரிதான், எங்களுக்கு வேறு சொத்துக்கள் இல்லை. 1ம் பிரதிவாதி குடும்ப சொத்துக்களில் சிலவற்றை கோடாங்கி நாயக்கருக்கு விற்பனை செய்தார் என்றால் சரிதான், மேலும் சில சொத்துக்களை விற்பனை செய்துள்ளார். 1ம் பிரதிவாதி விற்பனை செய்த சொத்துக்களை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

6. வழக்குச்சொத்தில் உள்ள இரண்டு கிணறுகளில் ஒன்றை 1ம் பிரதிவாதிதான் வெட்டினார் என்றால் சரியல்ல. 2005ம் வருடம் ஒரு கிணறை 1ம் பிரதிவாதிதான் வெட்டினார் என்றாலும் வழக்கிற்காக அதை மறுத்துச்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதி இறப்பு தேதியை தவறாக குறிப்பிட்டு இடைக்கால மனு எண் 401/18, 75/21, 76/21 ஆகியவற்றில் தாக்கல் செய்திருந்தேன் என்றால் எனக்குத்தெரியாது. மேற்படி மனுக்களில் திருத்தல் மனு தாக்கல் செய்து இறப்பு தேதியை திருத்தினோம் என்றால் சரிதான்.

7. 2016ல் பிராது தாக்கல் செய்து 1ம் இலக்கச்சொத்து மற்றும் 4ம் இலக்கச்சொத்தில் உள்ள கிணறுகளையும் 9 வருடங்கள் கழித்து மனு எண் 7/25 தாக்கல் செய்து வழக்கில் சேர்த்தேன் என்றால் சரிதான். எனது பிராதில் எனது அப்பா வழக்குச்சொத்துக்களை கிரையம் பெற்ற பத்திரங்களின் விவரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான், ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்குரையில் எனத பாட்டி தங்கம்மாள் கிரையம் பெற்ற பத்திரங்களின் விவரம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

8. எனது அப்பாவும் அவரது தம்பி பழனியாண்டி செட்டியாரும் அவர்களுக்கும் எப்போது எவ்வாறு பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்று வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு நான் சொத்து வரி செலுத்தியுள்ளேனா என்றால் நான் செலுத்தியதில்லை. சொத்து வரி ரசீதுகளை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. சொத்து மதிப்பு 60 லட்சம் என்றால் எனக்குத்தெரியாது. சொத்து மதிப்பை நீதிமன்ற கட்டணம் குறைத்து செலுத்துவதற்காக தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

9. வழக்குச்சொத்தில் எந்த காலத்திலும் நான் அனுபவத்தில் இல்லை என்றாலும் அதனால் நீதிமன்ற கட்டணம் பிரிவு 37(2)ன் கீழ் செலுத்தியது தவறு என்றாலும் சரியல்ல. வழக்குச்சொத்தில் உள்ள மண் வீட்டையும் மின்சார இணைப்பு, கதவு எண் பற்றி வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்குரையில் வழக்கு சொத்திற்கான பட்டா எனது அப்பா பெயரில் இருந்ததாக சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. வழக்குச்சொத்தின் 1ம் இலக்கத்தில் 27.5 சென்டை முத்துமாணிக்கம் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல, அது பொதுவாகத்தான் வாங்கப்பட்டது.

10. வா.சா.ஆ. 5 முதல் 9 வரையுள்ள கிரைய ஆவணங்கள் எங்கள் குடும்பத்தினரால் கூட்டாக வாங்கப்பட்டதா என்றால் கூட்டாகதான் வாங்கப்பட்டது. 1ம்பிரதிவாதி வழக்குச்சொத்துக்களை பொறுத்து 6 முதல் 11 பிரதிவாதிகளுக்கு உயில் எழுதி பதிவு செய்துள்ளார் என்றால் எனக்குத்தெரியாது. 1ம் பிரதிவாதி 1ம்

இலக்கச்சொத்தின் பகுதியை கிரையம் வாங்கிய விவரமும் அவரது சொத்துக்களை பொறுத்து உயில் எழுதிய விவரம் தெரிந்துகொண்டே வழக்கிற்காக மாற்றிச்சொல்கிறேன் என்றால் சரியல்ல.

11. வா.சா.ஆ.5 முதல் 9 வரையுள்ள ஆவணங்களில் எவ்வளவு விஸ்தீரணம் என்ன சர்வே எண்ணில் யாரிடமிருந்து கிரையம் பெறப்பட்டன என்ற விவரம் எனக்குத்தெரியுமா என்றால் எனக்குத்தெரியாது. வழக்குச்சொத்துக்களை எனது அப்பாவும் 1ம் பிரதிவாதியும் கிரையம் வாங்கிய காலத்தில் நானும் 2ம் வாதியும் சிறு குழந்தைகள் என்றால் சரிதான். எனது வழக்குரையில் உள்ள முழு விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்குத்தெரியாது என்றால் எனக்கு எழுதப்படிக்க தெரியாததால் அதில் உள்ள விவரங்கள் எனக்குத்தெரியாது.

12. வழக்கின் 4ம் இலக்கச்சொத்து எனது அப்பா பெயரிலோ எனது பாட்டி பெயரிலோ உள்ளதாக காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்யாமல் வழக்கிற்காக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் கூட்டாக அனுபவம் செய்கிறோம் என்பதைக்காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நானும் 2ம் வாதியும் எந்தக்காலத்திலும் வழக்குச்சொத்தில் அனுபவத்தில் இல்லை என்றாலும் வழக்குச்சொத்தைப்பற்றி எனக்கு முழுமையாக தெரியாது என்றாலும் சரியல்ல. வழக்கின் தேவையான தரப்பினர்களை சேர்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

13. வழக்கின் முறையான நீதிமன்ற கட்டணம் செலுத்தாத காரணத்தால் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. காலவரையறையைத்தாண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. வழக்குச்சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு அவர்கள் தனிப்பட்ட அனுபவத்தில் உள்ள சொத்துக்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டிருந்ததை 2023 ம் வருடம் இறந்துபோன எனது

தந்தை பெயரில் எனது அதிகாரத்தை பயன்படுத்தி மாற்றியுள்ளதால் வா.சா.ஆ.11 பட்டா செல்லாது என்றால் சரியல்ல.

14. 5 முதல் 11 பிரதிவாதிகள் விவசாயத்தில் ஏற்பட்ட கடனால் பாதிக்கப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/-M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.